## இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் - 2017

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 108 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வயம்ப பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையின் பிரகாரம் தயாரிக்கப்படுவதாக கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சுய நிதியிடல் செயற்பாடுகளின் கீழ் நடாத்திச் செல்லப்படும் வெளிவாரி பாடநெறிகள் மூலம் கிடைக்கும் வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நெனோ தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை அபிவிருத்தி செய்யும் ஒப்பந்தத்திற்காக 2016 திசெம்பர் 30 ஆந் திகதி ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,742,595 ஆன முற்பணத் தொகை 2017 மே 18 ஆந் திகதி ஒப்பந்தக்காரரால் தீர்வுசெய்யப்பட்டிருந்த போதிலும், அத்தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை மேலும் அறவிடப்பட வேண்டிய முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) வயம்ப பல்கலைக்கழகத்தின் குளியாப்பிட்டிய மற்றும் மாகந்துர வளவுகளிலான மருத்துவ நிலையங்களில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 93,643 தொகையான மருந்து இருப்புக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டிற்குரித்தாக மாகந்துர வளவில் பொருத்தப்பட்டுள்ள தொலைபேசி கோபுரத்திற்காக அந்நிறுவனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய குத்தகை வாடகை மற்றும் மின்கட்டணங்கள் முறையே ரூபா 42,350 மற்றும் ரூபா 169,510 ஆன தொகையும் சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,229,656 தொகையையும் கணக்கீடு செய்தல் நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஈ) மூலதனச் மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு உரிய மானிய பெறுமதிக்கு காலக்கழிவு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்குரிய காலக்கழிவு கணக்கிடல், கட்டிடங்கள் தவிர சொத்துக்களில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டமையால் ரூபா 68,697,000 கூடுதலாக காலக்கழிவு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியின் போது மூலதனச் செலவினங்களிற்காக ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 253,891,149 ஆன செலவினம் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்காக சான்றுகளின்மை

ரூபா 408,276,027 பெறுமதியான 37 ஏக்கர் 02 ரூட் 04 பேர்ச் காணி தொடர்பான உரித்துறுதி / கையளித்தல் கட்டளை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நானாவித கடன்பட்டோர் மற்றும் பெறவேண்டிய விடுதிக் கட்டணம் முறையே ரூபா 31,330 மற்றும் ரூபா 261,867 தொகைகள் 04 வருடங்கள் மற்றும் 07 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலவீச்சில் நிலுவையாக காணப்பட்டன.

(ஆ) ரூபா 159,740 கூட்டுத்தொகையான பல்கலைக்கழக பதவியணியினரின் 03 கடன் மீதிகள் 09 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்குகளில் காணப்படும் 01 ஆண்டிற்கும் 02 ஆண்டுகளுக்கும் இடையே மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட முறையே ரூபா 352,850 தொகை மற்றும் ரூபா 374,270 தொகைகளை தீர்வு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 45 ஆம் பிரிவு மற்றும் 2005 யூலை 15 ஆந் திகதிய 30 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | திறைசேரியினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது நிலையான வைப்புக்களில் ரூபா 26,000,000 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 770 மற்றும் 772 | நீண்ட காலமாக விநியோகிக்கப்படாத மற்றும் பாவனைக்கு எடுக்கப்படாத ரூபா 428,452 பெறுமதியான 74 இருப்பு விடயங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2016 மார்ச் 01 ஆந் திகதிய 04/2016 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | சுயநிதியிடல் செயற்பாடுகளால் உருவாகும் நிதியத்தை பயன்படுத்துவதற்கான வழிகாட்டலின் பிரகாரம் கிரய மேவுகை மற்றும் இலாபமற்ற அடிப்படையில் சுயநிதியிடல் பாடநெறிகளை பேணிச் செல்ல வேண்டிய போதிலும் 17 பாடநெறிகளின் செலவினத்தை மிகைத்து ரூபா 21,668,562 ஆன மிகையொன்று உருவாகியிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 7,295,596 தொகையான கணனி மற்றும் கணனி துணைப் பாகங்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2016 அனைத்துப் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட ரூபா 50,000,000 தொகையில் எஞ்சியிருந்த ரூபா 21,148,762 தொகையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளாமல் சொத்துக்கள் கையேற்பதற்காக செலவிடப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 67,708,979 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 204,029,628 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் வீழ்ச்சி ரூபா 136,320,649 ஆல் குறைவடைந்திருந்தது. பெறுமானத்தேய்வு ரூபா 126,389,000 இனால் அதிகரித்திருந்த போதிலும் காலக்கழிவு மற்றும் நன்கொடை ரூபா 312,516,000 ஆல் அதிகரித்தமை மேற்படி வீழ்ச்சி குறைவடைவதற்கு காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 135,852,595 தொகையான பற்றாக்குறை தளம்பல்களுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 67,708,979 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீள சீராக்கும் போது 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 371,793,368 பல்கலைக்கழகத்தின் சாதகமான பங்களிப்பு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 1,071,768,057 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

### 4.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் இலக்கிடப்பட்ட செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.1.2 செயற்பாடு மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016/17 கல்வியாண்டிற்காக பல்கலைக்கழகத்தின் 05 பீடங்களுக்காக அனுமதிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை 1245 ஆக இருந்த போதிலும், அக்கல்வியாண்டிற்காக 1084 மாணவர்கள் மாத்திரம் அதாவது 87 சதவீதம் அனுமதிக்கப்பட்டிருந்தனர். கால்நடைவள, கடற்றொழில் மற்றும் போசணைப் பீடத்திற்காக 2016/17, 2015/16 மற்றும் 2014/15 கல்வியாண்டிற்காக அனுமதிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 170 ஆக இருந்த போதிலும் முறையே 91, 89, 94 என மிகவும் குறைந்த மாணவர் எண்ணிக்கையொன்று அதாவது 55 சதவீதத்திற்கு குறைந்த சதவீதமொன்றாக இருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடங்களிலும் 2017 ஆம் ஆண்டில் பட்டப்படிப்பினை எதிர்பார்த்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் கல்விசார் பதவியணியினரின் எண்ணிக்கையும் நியம மற்றும் உள்ளவாறான விகிதமும் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பீடம் | பட்டப்படிப்பினை எதிர்பார்த்துள்ள எண்ணிக்கை | கல்விசார் பதவியணியினர் | | விகிதங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | நியமம் | உள்ளவாறான | நியமம் | உள்ளவாறான |
| விவசாயம் மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடம் | 602 | 60 | 39 | 10:1 | 15:1 |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 642 | 64 | 40 | 10:1 | 16:1 |
| வணிகக் கல்வியும் நிதிப்பீடமும் | 1853 | 103 | 35 | 18:1 | 53:1 |
| கால்நடைவளங்கள், கடற்றொழில் மற்றும் போசணைப் பீடம் | 455 | 46 | 35 | 10:1 | 13:1 |
| தொழில்நுட்ப பீடம் | 311 | - | 04 | - | - |

பல்கலைக்கழகத்தினால் பராமரிக்கப்பட வேண்டிய மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் விகிதம் தொடர்பாக கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன் வணிகக் கல்வியும் நிதிப்பீடத்தின் நியம மற்றும் உள்ளவாறான பதவியணியினரின் விலகல் 194 போன்ற மிகவும் டிய பெறுமதியொன்றை எடுத்திருந்தது.

(இ) மீளாய்வாண்டில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின் போது சமூகமயப்படுத்தப்பட்ட பட்டதாரிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் பட்டதாரிகளின் தொழிலில் ஈடுபடுத்துதல் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பீடம் | தொழிலில் ஈடுபடுத்துதல் சதவீதம் |
|---|---|
| விவசாயம் மற்றும் பெருந்தோட்டம் | 58 |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 77 |
| வணிகக் கல்வியும் நிதிப்பீடமும் | 62 |
| கால்நடை வளங்கள், கடற்றொழில் மற்றும் போசணைப் பீடம் | 79 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பட்டதாரிகளின் மேற்குறித்த தொழிலில் ஈடுபடுத்துதல் தொடர்பான கணிப்பீடு இறுதி பரீட்சை முடிவடைந்து 02 மாதங்களான சிறிய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட உரிய தகவல்களின் மூலம் மாணவர்களின் தொழிலில் ஈடுபடுத்துதல் மாற்றி காண்பிக்கப்பட்ட போதிலும், தம்மால் பெற்றுக்கொண்டிருந்த கல்வித்துறைக்குரிய தொழில் ஈடுபடுத்தல் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ii) உலக தரப்படுத்தல் (World of University Ranking) மற்றும் இலங்கை பல்கலைக்கழகங்களை தரப்படுத்தல் என்பவற்றின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது வயம்ப பல்கலைக்கழகம் முறையே 5409 மற்றும் 10 ஆம் இடத்தில் காணப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டின் போது முறையே 5791 மற்றும் 08 ஆவது இடத்தினை உரித்தாக்கி கொண்டிருந்தது.

(iii) 1999 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த கால்நடை வளங்கள், கடற்றொழில் மற்றும் போசணைப் பீடத்திலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையில் 350 பட்டதாரிகள் தமது பட்டப்படிப்பு பாடநெறிகளை பூர்த்தி செய்திருந்த போதிலும் போசணையாளர்களாக சுகாதார அமைச்சிற்கு ஆட்சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 18 ஆக இருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் 02 (குளியாப்பிட்டிய மற்றும் மாகந்துர) மருத்துவ நிலையங்களுக்காக இரண்டு மருத்துவ உத்தியோகத்தர்களின் சேவை தேவையென இனங்காணப்பட்டிருந்த போதிலும் நிரந்தரமாக ஒரு மருத்துவ உத்தியோகத்தரேனும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் மருத்துவ நிலையத்தின் மூலம் மேற்கொண்ட சிகிச்சைகளுக்கு குளியாப்பிட்டிய வைத்தியசாலையிலிருந்து அழைக்கப்பட்ட வைத்தியர் ஒருவர் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக அவ்வைத்தியருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1,690,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் வங்கி நடைமுறைக் கணக்கிற்குரிய மீளாய்வாண்டின் போது நேரடி பெறுவனவுகள் ரூபா 124,500 ஆக இருந்ததுடன் அவற்றை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 3,835,000 மதிப்பீட்டுப் பெறுமதியான 711 பேர்ச் ஆன காணிகளின் 08 கூறுகளை கையேற்பதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,013,750 தொகை பன்னல பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை உரிய காணியை கையேற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் நிர்மாணிக்கப்பட்டு வரும் ரூபா 77,872,750 இற்கு மதிப்பிடப்பட்ட 28 ஏக்கர் 12.84 பேர்ச் காணியை கையேற்பதற்காக பல்கலைக்கழகத்தினால் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 16,500,000 தொகை குளியாப்பிட்டிய மேற்கு பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் உரிய கையேற்பு நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) பல்கலைக்கழகத்தின் மாணவர் மற்றும் பதவியணியினர் விடுதிகளை நிர்மாணிப்பதற்காக மாகந்துர வளாகத்தில் 05 ஏக்கரையுடைய மஹயாய வத்த காணியை கொள்வனவு செய்வதற்காக 2013 யூன் 10 ஆந் திகதி ரூபா 10 மில்லியன் தொகை தென்னை ஆராய்ச்சி நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக விற்பனை உரித்துறுதியொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 03 ஆண்டு ஆராயச்சிக் காலப்பகுதியில் நடவடிக்கை எடுத்து பரிசோதனை அறிக்கைகளை வழங்குவது என்ற இணக்கப்பாட்டின் பேரில் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 324,535 தொகையான ஆராய்ச்சி படிகள் பெற்றுக்கொண்டிருந்த கல்விசாரா பதவியணி உறுப்பினரொருவர் தமது ஆராய்ச்சிக் காலம் முடிவடைந்திருந்த போதிலும் 2018 ஆகஸ்ட் மாதம் வரையிலும் ஆராய்ச்சி அறிக்கையை பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்காக பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் கல்விசாரா பதவியணியினர் முறையே 376 ஆகவும் 491 பேராக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் முறையே 284 மற்றும் 373 பேராக இருந்தனர். அதன் பிரகாரம் வெற்றிடங்களின் எணிக்கை முறையே 94 மற்றும் 119 பேராக இருந்ததுடன் மிககள் முறையே 03 பேர் மற்றும் ஒருவராக இருந்தனர்.

(ஆ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டின் பதவியணியனர் அறிக்கையின் பிரகாரம் மொத்த பதவியணியினர் வெற்றிடங்கள் 25 ஆக இருந்ததுடன் நிரந்தர கல்விசார் பதவியணியினர் வெற்றிடங்கள் 29 சதவீதமாக இருந்தது. இதன் காரணமாக நிறுனத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணியை நிறைவேற்றுவதற்கு அத்தியவசியமான பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு செயற்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் பதவியணியினர் தேவைப்பாடு ஆய்வுசெய்யப்பட்டு பதவியணியினர் மீளாய்வு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் 75 மாணவர்களை அனுமதிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு மருத்துவ பீடத்திற்காகன பதவியணியினர் தேவைப்பாடு மீளாய்வு செய்யப்பட்டு ஆட்சேர்ப்பதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது குளியாப்பிட்டிய வளவிலும் மாகந்துர வளவிலும் நடாத்திச் செல்லப்படும் 03 தொழில்நுட்பவியல் பாடநெறிகளுக்காக அனுமதிக்கப்பட்டிருந்த மாணவர்கள் 234 ஆக இருந்ததுடன் எதிர்வரும் ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது 246 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். எனினும் அப்பாடநெறிகளுக்கு தேவையான கல்விசார் பதவியணியினர் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 விளைவற்ற சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 500,000 பெறுமதியான வேன் வண்டியொன்று 2014 ஆம் ஆண்டு முதல் ஓட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுத்தாமல் பல்கலைக்கழக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாகந்துர மருத்துவ நிலையத்திற்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 680,042 தொகையான மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

நிலைபேரான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரல்'' பிரகாரம் சகல அரச நிறுவனங்களாலும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருப்பதுடன் மீளாய்வாண்டிற்குரித்தாக வயம்ப பல்கலைக்கழகத்தினால் தமது விடயப் பரப்பிற்குள் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் பதவியணியினர் மளாய்வு அறிக்கை மூலம் நிறுவனத்தின் விடயப் பரப்புடன் இணைந்ததாக உதவி உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரும் 04 கணக்காய்வாளர் உதவியாளர்களும் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வப்போது பதில் உதவி உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரும் கணக்காய்வாளர் உதவியாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு உள்ளகக் கணக்காய்வு பதவியணியினர் போதியளவில் காணப்படாமை உள்ளகக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு தடையொன்றாக இருந்தது.

(ஆ) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் மாணவர் கற்பித்தல் நடவடிக்ககளுக்காக விரிவுரையாளர்களை ஈடுபடுத்துவது தொடர்பான பரிசோதனை மற்றும் மதிப்பீடு மேற்கொள்ளப் படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் ஒப்பந்தக் கொடுப்பனவுகளுக்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் கோவைகள் இறுதிக் கொடுப்பனவிற்கு முன்னர் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 24 நிர்மாணங்களின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்படாத வேலை பெறுமதி ரூபா 68,661,154 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது அதில் எவ்வித முன்னேற்றமும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் வேலை நிறைவு செய்யப்பட்டிருந்த ரூபா 26,516,869 ஆன கட்டிடங்கள் தற்போது பயன்பாட்டில் காணப்பட்ட போதிலும் உரிய சொத்துக்களை கணக்குகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்காமல் பூர்த்தி செய்யப்படாத வேலையாக தொடர்ந்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) பிரயோக விஞ்ஞான பீடத்தின் கட்டிட நிர்மாணம்**

2014 யூலை 10 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் பேரில் ஒப்பந்தக்காரர் முன்வைத்த கிரய மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 315,250,260 கிரயத்திலான பிரயோக விஞ்ஞான பீடத்தின் கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் 2014 ஆகஸ்ட் 29 ஆந் திகதி முதல் 2016 மார்ச் 29 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2016 மார்ச் 29 ஆந் திகதி வரையிலும் கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 செப்தம்பர் 02 ஆந் திகதிய எம்ஈ/பீஆர்/எம்ஓஎச்ஈ/ஜீஈஎன் ஆம் இலக்க உயர்கல்வி அமைச்சு செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்ட ஒப்பந்த காலத்தில் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு 02 மாதங்கள் வரையான காலநீடிப்பு வழங்க முடியுமாக இருந்த போதிலும் உரிய நிர்மாண வேலையின் மேலும் பூர்த்தி செய்ய வேலைப்பகுதிகள் மற்றும் அவற்றை பூர்த்தி செய்யும் முறையைக் காண்பிக்கும் விபரங்களையும் பெற்றுக்கொள்ளாமல் முதலாவது காலநீடிப்பு 2016 செப்தம்பர் 30 வரை 06 மாதங்கள் மற்றும் இரண்டாவது காலநீடிப்பு 2016 செப்தம்பர் 31 ஆந் திகதி வரை 3 மாதங்களாக உபவேந்தரால் காலநீடிப்பு அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(iii) ஒப்பந்தக்காரரால் 2016 நவம்பர் 26 ஆந் திகதி முதல் 2016 திசெம்பர் 30 ஆந் திகதி வரையன காலப்பகுதியில் நிறைவேற்ற வேலை உள்ளடக்கப்பட்டு நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டதாக 2017 மே 08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது வரை 16 வேலை உருப்படிகளில் 5 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் நிறைவேற்றப்படாத வேலைகள் காணப்பட்டதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iv) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்க வேண்டிய இக்கட்டிடத்தின் 16 வேலை உருப்படிகளின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்படாதிருக்கையில் 2018 மே 08 ஆந் திகதி கருதும் போது தாமதக் கட்டணங்களாக ரூபா 31,525,026 அறவிடக்கூடியதாக இருக்கையில் அதனைக் கருத்திற் கொள்ளாமல் மொத்த ஒப்பந்த பெறுமதியான ரூபா 315,250,260 மேவுகை செய்யப்படும் வகையில் 16 ஆவது இடைக்கொடுப்பனவாக 2017 மே 08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல் திருத்தம் செய்யப்பட்டு ரூபா 13,913,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(v) கட்டிடத்தின் தொலைபேசி மற்றும் வலையமைப்பு முறைமை (Network System) இற்கான நடவடிக்கைகள் இரண்டு மாடிகளில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட வேலை விடயங்கள் கைவிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக மதிப்பிடப்பட்ட ரூபா 1,775,000 தொகையான மொத்த பணமும் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(vi) கேட்போர்கூடம் உட்பட பூர்த்தி செய்யப்பட வேண்டிய 3 வேலை பகுதிகளுக்காக ரூபா 3,800,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(vii) 32 ஆம் இலக்க விடயங்க இலக்கத்தின் பிரகாரம் ரூபா 10,972,000 செலுத்தப்பட்டிருந்த கட்டிடத்தின் உள்ளக பகுதியாக்கல் 3mm தடிப்புடன் கூடிய 02 Compsite Board ஆல் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு குறைந்த தடிப்புள்ள Board அதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(viii) 38 ஆம் விடய இலக்கத்தின் பிரகாரம் வேலை விடயத்திற்காக ரூபா 1,977,437 தொகையான மொத்த பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் குறித்த செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 6.4 தாமதமான செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகந்துர மருத்துவ நிலைய கட்டிட நிர்மாணத்திற்காக ஒப்பந்த கம்பனியுடன் 2014 ஆகஸ்ட் 17 ஆந் திகதி பூர்த்தி செய்தல் என்ற இணக்கப்பாட்டுடன், 2013 சனவரி 17 ஆந் திகதி ரூபா 14,485,175 ஆன வரியில்லாத பெறுமதிக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. பல சந்தர்ப்பங்களில் கைவிடப்பட்ட இந்த நிர்மாணம் தொடர்பாக இணக்கப்பாட்டிற்கு வரவோ அல்லது இரத்துச் செய்து ஒப்பந்தக்காரரைக் கொண்டு துரிதமாக நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 86,552,870 உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதியுடன் பூர்த்தி செய்வதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட நிர்மவாகக் கட்டிடத்தின் நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 6.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

2016 ஆம் ஆண்டின் போது நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 52,282,156 தொகையான கொடுப்பனவினை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பாதீட்டில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6.6 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாடு சென்ற காலப்பகுதியில் மீள் வருக தராத இரண்டு விரிவுரையாளர்களிடமிருந்து 2011 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 3,172,714 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 நவம்பர் 28 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் மீதான கணக்குக் குழுவின் பணிப்புரைகளின் பிரகாரம் பீடத்தின் மூலம் சுயநிதியிடல் பாடநெறிகளுக்குரிய கணக்குகளில் ரூபா 123,292,960 ஆன மீதியொன்று பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | காணிகளின் உரித்தை கையேற்காமை மற்றும் நிலையான சொத்துப் பதிவேடொன்றைப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | ஒப்பந்த நிர்வாகம் | நிர்மாணச் செயற்பாடுகளை உடன்படிக்கையின் பிரகாரம் துரிதமாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் நிர்மாணங்களுக்குரியதாக பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதிக்கான பட்டியல்களை விரைவாகப் பெற்று தீர்த்து வைப்பதற்கும் சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்காமை |
| (இ) | செயற்பாட்டு கட்டுப்பாடு | ஒவ்வொரு பீடத்திற்காகவும் சேர்த்துக் கொள்ளக்கூடிய ஆகக்கூடிய மாணவர் எண்ணிக்கை சேர்த்துக்கொள்ளப்படாமை. |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | கிடைக்கப்பெற்ற நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துகின்ற முறையைக் காண்பிக்கின்ற பிரகாரம் பாதீடு தயாரிக்கப்படாமை. |
| (உ) | உள்ளகக் கணக்காய்வு | போதியளவு உள்ளகக் கணக்காய்வாளர்களை ஆட்சேர்க்காமை போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்றை மேற்கொள்ள தடையொன்றாக அமைந்தமை |